2003 மார்ச் 31]

உறுப்பினருடைய கருத்து உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும். உயர் நீதிமன்றத்திடம் கருத்துப் பெற்ற பிறகு, மத்திய அரசு நிதி உதவியை அளித்த பிறகு--வரும் ஆண்டிலே நிதி அளிப்பார்கள் என்ற நம்பிக்கை நிச்சயம் இருக்கின்ற சூழ்நிலையில்--அவருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 144, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

144—

தங்கும் விடுதி

***20865—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசி அருள்மிகு லிங்கேஸ்வரர்-கருணாம்பிகை அம்மன் திருக்கோவிலில் தங்கும் விடுதி அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், அவிநாசி அருள்மிகு அவிநாசி லிங்கேஸ்வரர் திருக்கோவில் சார்பாக பக்தர்கள் தங்கும் விடுதி கட்ட போதிய இடவசதியில்லாத காரணத்தால் திருக்கோவில் மூலம் தங்கும் விடுதி கட்டும் வாய்ப்புத் தற்சமயம் இல்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை நோக்கி எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொண்டு, அவிநாசி அருள்மிகு லிங்கேஸ்வரர் கோயில் என்பது 'காசியிலே வாசி அவிநாசி' என்று

சொல்வார்கள். அப்பேற்பட்ட புகழ்பெற்ற அவிநாசி அருள்மிகு லிங்கேஸ்வரர் கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் சித்திரை மாதத் திருவிழாவுக்கு வருகை தருகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு எந்தவொரு விடுதியும் இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே நமது அறநிலையத் துறையின் மூலமாக, பொதுமக்கள் நலன் கருதி தங்கும் விடுதி அமைத்துத் தரப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயிலுக்கு ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், நஞ்சை புளியம்பட்டி கிராமத்தில் 8 ஏக்கர் 83 செண்ட் நஞ்சை நிலமும், அவிநாசி கிராமத்தில் 2.46 ஏக்கர் புஞ்சை நிலமும், கட்டடங்கள் 18-ம், மனைகள் 9-ம் உள்ளன. இத்திருக்கோயிலின் ஆண்டு வருவாய் ரூபாய் 22 இலட்சத்து 39 ஆயிரம்தான். எனவே, திருக்கோயிலுக்குச் சொந்தமாகக் காலியாக உள்ள 8 ஆயிரம் சதுர அடி நிலத்தில் உபயதாரர்களால் பக்தர்கள் தங்கும் மண்டபம் கட்டப்படவுள்ளது. அறநிலையத் துறையின் மூலம் தற்சமயம் கட்ட இயலாது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். இதை அடுத்த ஆண்டாவது அரசு பரிசீலித்து பொதுமக்களின் நலன் கருதி தங்கும் விடுதி அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத் தனியார் ஒருவர் முன்வந்து உபயதாரர்கள் மூலம் பக்தர்கள் தங்கும் மண்டபம் கட்டுவதற்கு இந்த ஆண்டே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்; அதன் மூலம் கட்டப்படும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 145, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.